# இரண்டாம் உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி மாநாடு 2017

(ஆய்வுக் கோவை)

**பதிப்பாசிரியர்கள் குழு**

பேராசிரியர் சு.குமரன், மலேசியா

முனைவர் உ.கருப்பத்தேவன்

முனைவர் ஆ.முனியன்

முனைவர் அ.காமாட்சி

முனைவர் கா.உமாராஜ்

தனேசு பாலகிருட்டிணன், மலேசியா

வெளியீடு

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

# இரண்டாம் உலகத் தமிழ்க் காப்பிய
# ஆராய்ச்சி மாநாடு 2017
## (ஆய்வுக் கோவை)

© மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021

முதற்பதிப்பு : 2017

பக்கங்கள் : 654

விலை : ரூ.**430**

வெளியீட்டாளர் : **சி.பி. கோபால்**
**இலட்சுமி பதிப்பகம்,**
1/117, APM காலனி,
செட்டிபாளையம் சாலை
ஈச்சனாரி அஞ்சல், கோயம்புத்தூர் -641 021
செல்: 99420 55482

ISBN : 978-81-908206-9-1

வெளியீடு : **மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
மதுரை - 625 021.

அச்சாக்கம் : **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ் - ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
மதுரை-9. செல்: 98422 93915

| | | |
|---|---|---|
| 74. | **மணிமேகலையில் மனிதநேயம்**<br>எம்.எஸ்.புனிதவதி | 432 |
| 75. | **காப்பியங்களில் அறிவியல் சிந்தனையும் ஒப்பீடும்**<br>பேரரசி | 435 |
| 76. | **காப்பியங்களில் சமயக் கோட்பாடுகள்**<br>பொன்முத்து சண்முகம் | 440 |
| 77. | **மாதவியின் ஆளுமைத்திறம்**<br>பா.பொன்னி | 447 |
| 78. | **சிலப்பதிகாரத்தில் காணப்படும் கட்டிட பொறியியலின் ஓர் அங்கமான தலைநகரங்களின் நிர்ணயம் மற்றும் வடிவமைப்பு**<br>ஜெ.மகேஸ்வரன் | 454 |
| 79. | **காப்பியங்களில் காணும் பண்பாடுகள் - மணிமேகலை**<br>கோ. மணிகண்டன் | 457 |
| 80. | **சிலப்பதிகாரத்தில் மூவேந்தர் பெருமை**<br>இ.மா. மாசனமுத்து | 460 |
| 81. | **தமிழ்க் காப்பியங்களை கல்வியியல் நோக்கில் பயிற்றுவிக்கும் முறைகளும் உத்திகளும்**<br>முனைவர் ஆ. மாலதி | 467 |
| 82. | **காப்பியங்களை நடத்துவதில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் முரண்பட்ட கருத்துகளும், மாணாக்கர்களின் கேள்விகளும் ஒரு பார்வை**<br>கோ.மாலினி சீதாவிஜயன் | 473 |
| 83. | **சிலம்பில் அணிகலன்கள்**<br>தே.மீனாலட்சுமி | 480 |
| 84. | **பௌத்த தத்துவமும் மணிமேகலையும்**<br>பா. முத்துசாமி | 486 |
| 85. | **காப்பியங்களில் கனவு உத்தி**<br>ந.முத்துமணி | 491 |
| 86. | **சிலம்பில் காப்பியக் கூறு - இயற்கை**<br>இரா. முத்துலட்சுமி | 495<br>495 |
| 87. | **கம்பராமாயணத்தில் போர் குறித்த நிகழ்வுகள்**<br>க.முத்துவேல் | 498 |
| 88. | **சிலப்பதிகாரத்தில் பண்பாடு**<br>சு. முருகலெட்சுமி | 503 |
| 89. | **கம்பனில் சூழல்அறமும் எதிர்காலவியலும்**<br>க.முருகேசன் | 507 |
| 90. | **ஐம்பெருங்காப்பியங்களில் நாடகக் காப்பியம் - சிலம்பு**<br>இராசா. முருகேசன் | 519 |
| 91. | **சிலப்பணிகாரத்தில் சாட்சியச் சட்டம் (வழக்குரை காதை)**<br>ச.மோகன் | 523 |

# கம்பனில் சூழல் அறமும் எதிர்காலவியலும்

**க.முருகேசன்**
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி

கம்பராமாயணத்தில் கம்பரது தமிழிலக்கியப்புலமை, பிறமொழிப் பயிற்சி, கற்பனை வளம், காவிய இன்பம், சொற்களை ஆளும் ஆற்றல், கருத்துக்களை நயம்பட விளக்கும் முறை, கவிதையை உருவாக்கும் பாங்கு, சந்தங்களை அமைக்கும் திறன், எதிர்காலத்திற்குப் பொருந்தும் பாடுபொருள் நெறிகள் ஆகிய புலமைக்கூறுகள் கற்போர் உள்ளத்தைக் கவர்கின்றன. காப்பியப் புலவர்கள் கதைப்போக்கில் தான் படைத்திருக்கும் காப்பிய மாந்தர்களுக்கு எதிர்காலத்தில் நேரவிருப்பதை, 'அரிமா நோக்கு' எனும் உத்தியைப் பயன்படுத்தித் தொனிப்பொருளாகச் சுட்டிச் சென்றார்கள். ஒரு சிங்கம் நடந்து செல்லும்போது பின்னால் திரும்பிப் பார்த்துப் பார்த்து முன்னேறிச் செல்வதைப் போன்று, காப்பிய ஆசிரியர்களும் நிகழ்காலத்தை எழுதிக் கொண்டு வரும்போதே, எதிர்காலத்தைச் சூட்சுமமாகவும் இலைமறை காயாகவும் கோடிட்டுக் காட்டினார்கள். இப்பார்வையில் கம்பநாடன் எதிர்காலவியல் நோக்கில் சுற்றுச்சூழலின் மேன்மையைக் கவிப்பொருளாக்கியுள்ள பாங்கினையும், சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் முன்மொழிவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கம்பனும் எதிர்காலவியலும்

எல்லாக் காலத்திலும் மனிதனுக்கு எழக்கூடிய பிரச்சனைகளுக்குரிய, என்றும் ஈர்க்கக்கூடிய விடைகளுக்குக் கம்பன் தன்னுடைய கவிமேதாவிலாசத்தால் அழகூட்டி இருப்பதால் காலங்களை வென்று இக்காவியம் நிற்கின்றது. உள்ளதை உள்ளபடி சொல்வதிலும், உள்ளதை உணர்ந்தபடி சொல்லவல்லதே கவிதைக்கலை. அப்படியானால் கம்பன் இந்த விலங்கியல், சாத்திர அறிவையெல்லாம் வெறுமனே கற்றவன்; கற்று அறிந்தவன் மட்டுமல்லவன்; அவற்றை உணர்ந்து அறிந்தவனும் கூட; ஆதலால் கம்பன் கல்வியிற் பெரியவர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்தாலியில் தோன்றிய எதிர்காலவியல் (Futurology) எனும் தனித்துறை, ஏற்கெனவே தமிழ்க்காப்பியப் பரப்பில் கருக்கொண்டிருந்தது. பின்னால் நடக்கக்கூடியதை முன்னறிவிப்புச் செய்கின்ற கலைநுணுக்கத்தைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். 'Futurum' என்ற இலத்தீன் சொல்லும் 'Logos' எனும் கிரேக்கச் சொல்லும் சேர்ந்தே 'Futurology' 'எதிர்காலவியல்' எனும் தொடர் உருவாயிற்று. ஓசிப் ப்ளெச்தையின் எனும் சிந்தனையாளர் சுட்டுவது போல, இன்றைய செயல்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பது, நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவது எதிர்காலவியல் எனப்படும்" என்ற தி.இராசகோபாலனின் விளக்கம் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது (கம்பன் மலர்-2013, பக்.20-21).